தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஞு ஆடிமீ 18உ (2-8-'22.) | ப. 15.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல் சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாகள் சகல தினுசுகளும் தயாராக இருக்கிறது. அதன் விபர கேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES

(PER INSERTION)

Per 1	Page	Rs. 16
Per ½	Page	Rs. 9
Per ¼	Page	Rs. 5

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

சுதேசியமானது! உபயோகமானது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

விஷய அடக்கம்.

வியாசங்கள்.

1. வர்த்தமானம் 130
2. அவரும் பித்தனா? 131
3. ராஜாங்கக் கைதிகள் 132
4. 'ஒன்றுக்கும் உதவாதது' —— 133
ஸ்ரீமான் M.R. ஜயகர்

மகாத்மாவின் கைங்கரியம்.

5. ஹகீம் அஜ்மலின் வேண்டுதல் 133
6. Pandit மோதிலால் நேரு 133

ஸாஹித்யம்.

7. புயற் காற்று 135
(ஸ்ரீமான் V. நாராயணய்யர், M.A.,M.L., எழுதியது)
மகாகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகூரின்
'ரெக்' என்னும் கதையின் மொழிபெயர்ப்பு

ஸையன்ஸ்.

8. வரப்போகும் யுத்தங்கள் 137

ஹாஸ்யம்.

9. மருளர் மடம் 138
(ஸ்ரீமான் 'ராமசந்த்ரர்' எழுதியது)

தமிழ் உலகு

துந்துபிஹூ ஆடிமீ 18உ

வர்த்தமானம்

சென்றவாரம் நமது ராஜதானியில் நடந்த பிரதானமான விஷயம் காங்கிரஸ் கமிட்டியின் வரவே. சட்டங்களை மறுப்பதற்குத் தகுந்த பக்குவத்தை ஜனங்கள் யாவரும் அடைந்து விட்டார்களா என்பதைத் தீர்மானிப்பதின் பொருட்டு காங்கிரஸ்மகாசபையால் நியமிக்கப்பட்ட இக்கமிட்டியார் ஊரூராய்ச் சென்று தேசிய உழைப்பில் இருப்பவர்களைச் சாக்ஷிகளாக விசாரித்து வருகிறார்கள். சென்னையில் மூன்றுநாள் இருந்து, பிறகு ஈரோடு சென்றிருக்கிறார்கள்.

சென்னை நகரத்தார் அவர்களை வெகுமேன்மையாய் வரவேற்று உபசரித்தார்கள். சென்ற செவ்வாய்க்கிழமை சாயந்தரம் கமிட்டியார் உபன்யாசங்களைக் கேழ்க்க திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய ஜனங்கள் சுமார் 20000 இருக்கலாம். அந்தசமயத்தில் இந்து மஹம்மதீய ஐக்கியத்திற்குத் தாய்ச்சுவர்போல் இருந்து வரும் ஹகீம் அஜ்மல்கான் தென்னாட்டு ஜனங்களின் படிப்பையும், புத்திகூர்மையையும் புகழ்ந்தும் அத்தன்மையான குணங்களை தேசியஇயக்கத்தில் பூரணமாக வழக்கப்படுத்தாததைப்பற்றி வருத்தப் பட்டும் பேசினார். பிறகு, தேசத்தின் நன்மையையே கருதி ஸர்வத்தையும் இழந்த பண்டிட் மோடிலால் நேரு, ஒற்றுமையாமை ஒழிந்து விட்டதென்று சிலர் சொல்லுவது முற்றிலும் பிசகென்றும், மகாத்மாகாந்தியின் வேண்டுகோளின்படி குடிமறுத்தல் தீண்டாமை யொழித்தல், கதர் உடுத்தல் இதுகளினாலே தான் இந்தியாவுக்குக் கரையேற்றம் வருமென்றும் வற்புறுத்திப் பேசினார். மறுநாள் சாயந்திரம் மாணவர் கூட்டத்திற் பிரசங்கம் பண்ணும் போது, ஸ்வராஜ்யம் கிடைக்கும்வரை ஒட்டுக்குழந்தைமுதல் வயது முதிர்ந்த கிழவன் வரை யாவரும், வேறு விதமான காரியங்களில் மனதைச் செலுத்தாமல், ஸ்வராஜ்யம் அடையவேண்டியதற்காகவே முயலவேண்டுமென்று கூறினார்.

இந்தக் கமிட்டியார் சட்ட மறுத்தல் ஆரம்பிக்கலாமா என்பதைப்பற்றி விசாரிக்கக் கிளம்பியிருந்தபோதிலும், இதுவரையில் அவர்கள் விசாரித்த சாக்ஷிகள் மூலமாகவும், தாங்கள் ஒவ்வோரிடத்திலும் இருக்கும் நிலைமையை நேரிட பார்த்ததிலிருந்தும், சட்டமறுத்தலாரம்பிப்பதற்கு, இன்னும் நம் தேசத்தார் தயாராகவில்லை என்பது அவர்களுடைய தீர்மானம் என்பதாக ஊகிக்கப்படுகிறது.

சென்ற சனிக்கிழமை பேரளத்தில் தஞ்சாவூர் ஜில்லா கான்பரன்ஸ் நடந்தது. ஸ்ரீமான் டீ. வீ. கோபாலசாமி முதலியார் தமது வரவேற்புப் பிரசங்கத்தில், காங்கிரசுக்குமீறி நடப்பது முற்றிலும் தகாததென்றும், இப்பொழுது பார்டோலியில் கொண்ட தீர்மானங்களை மாற்றவோ கைவிடவோ யாதொரு காரணமுமில்லையென்றும், அவைகளாலேயே தான் நம் தேசத்திற்கு க்ஷேமமுண்டாகவேண்டுமென்றும் சொன்னார். கான்பரன்ஸின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் டி. வி. வெங்கட்டராமய்யர் தனது பிரசங்கத்தில் இந்த விஷயங்களை ஆமோதித்தது மன்றி, தேசமுழுவதும் சட்டமறுத்தலை அனுஷ்டிப்பது இப்பொழுது சாத்தியமில்லையென்றும், ஆனால் அடக்கமும் வைராக்கியமுமுள்ள சிலர்மட்டும் இதை அனுஷ்டிக்கலாமென்றும் கூறினார். குடிப்போரைத்தடுப்பதிலும், பிரசங்கம் முதலானது செய்வதை அரசாங்கத்தார் தடுத்தால் அவர்களாணையை மீறி நடப்பதிலுமே இவர்கள் சட்ட மறுத்தலென்பதைக் கைக்கொள்ளலாமென்று ஸ்ரீமான் வெங்கட்டராமய்யர் அபிப்பிராயப்படுகிறார்.

சென்னையிலும், பம்பாயிலுமுள்ள "1921 Club" என்று சொல்லப்பட்ட கூட்டத்தார், ஸ்வராஜ்யம் கிடைப்பதின் பொருட்டு, ஒற்றுமையாமையில் நம்பாத யாவரும், அடுத்த நவம்பர்க்குள் ஒரு கூட்டம் கூடி சில ஏற்பாடுகள் செய்ய யத்தனிக்கிறார்கள். சட்டசபைகளின் அடுத்த எலெக்ஷன் வருமுன் ஊரூராகச்சென்று, ஸ்வராஜ்யத்தின் அவசியத்தைப் பற்றி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, அடுத்த எலெக்ஷனில், ஸ்வராஜ்யத்திற்காகச் சண்டை போட தீர்மானித்திருப்பவரை மட்டும் சட்டசபைகளின் அங்கத்தினராகப் பொருக்கி யெடுக்கச் செய்யவேண்டும்; அப்படிச்செய்தபிறகு, புதுச் சட்டசபையாரும், தேசத்தின்

நன்மையைக் கருதும் இன்னும் சிலரும், ஒரு கூட்டம் கூடி அதில் இந்தியாவின் சுதந்திரத்திற்கு முக்கியமான சில தீர்மானங்களைச் செய்து அவைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரும்படி சட்டசபைகள் மூலமாக அரசாங்கத்தாரை தாக்க வேண்டும் மென்பது இந்த "1921 Club" அங்கத்தினருடைய கருத்து.

கல்கத்தா நகரத்தில் அயல் நாட்டுத்துணிகள் விற்கும் கடைகளில் மறியல் போடுவதை காங்கிரஸ் வாலண்டியர்கள் மறுபடியும் ஆரம்பித்திருக்கிறார்கள். சிலர் அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கவர்னர் ஜெனரலுடைய மந்திராலோசனை சபையில், சட்டத்திற்கு மெம்பராக விருக்கும் டாக்டர் தேஜ் பஹதூர் ஸாப்ரூ, உடம்பு அசௌகரியத்தினால், வேலையை ராஜிநாமா செய்யப் போகிறார். அவருக்கு பதிலாக பம்பாய் மந்திராலோசனைசபை அங்கத்தினரான ஸர் சிமன்லால் சேடல்வாட் நியமிக்கப்படுவாரென்ற ஓர் வதந்தி இருக்கிறது. பம்பாயில் பாரிஸ்டராகவிருக்கும் மஹம்மதலி ஜின்னா, சிலர் தனக்கிந்த வேலை கிடைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருப்பதாகவும், அது முற்றிலும் தவறு, தான் அரசாங்கச் சம்பளம் ஒரு பைசா கூட வாங்கத்தயாராயில்லை என்று பத்திரிகைகளுக் கெழுதியிருக்கிறார்.

அவரும் பித்தனா?

எந்ததேசத்திலும் இக்காலத்தில் மகாத்மா காந்தியைப்பற்றியே அனைவரும் பேசிவருகின்றார்கள். இங்கிலண்டிலும், அமெரிகாவிலும் மிக்கக் கியாதிபெற்றவர்கள் கூட இவரைப்பற்றி எழுதுவதையும், பேசுவதையும் நோக்குங்கால், நமக்கும் அஃதோர் வியப்பை உண்டாக்குகின்றது. இந்தியா சம்பந்தமாக இதுவரையில் அன்னிய நாட்டார் ஒருபோதும் அக்கரைபாராட்டிவந்ததை நாம் கண்டதில்லை. ஆகிலும் இத்தருணத்தில் இந்தியர்கள் விஷயமாய் இவ்வுலகிற் பெரும்பான்மையோர் கவலையெடுத்துக் கொள்கிறார்களென்பது நிச்சயமே. அதற்கும் மகாத்மா காந்திதான் முக்கிய காரணமாக இருக்கிறார். என்னெனில் அவரைப்போல ஒருவரும் இதுகாறும் இருந்ததில்லை. தென்னாபிரிகாவில் ஏராளமாய்த் தான் சம்பாதித்துச் சேர்த்த தெல்லாவற்றையும் இந்தியர்களின் நன்மைக்காகவே முழுவதும் செலவழித்துவிட்ட இம்மகாபுருஷனின் பெருமையை நாம் எவ்வாறு வருணிக்கக் கூடும்? மேலும் இந்தியாவுக்குத் திரும்பிவந்த பிறகும், இந்தியர்களது கதியை நன்றாய் உணர்ந்து, அவர்களுக்காகவே உடல், பொருள், ஆவி இவைகளைச் சிறிதேனும் லக்ஷியம் செய்யாமல், தானும் அவ்வறுமையில் தனது காலத்தைக் கழிக்கத் தீர்மானித்தார். இவருக்கு முன் அப்படி யார் நடந்திருக்கிறார்கள்? இந்தியாவுக்கும் ஓர் விடிவுகாலம் எப்பொழுதாவது வரவேண்டுமாகில், அதற்காக வெறுவழிகளில் நாம் உழைப்பது அவசியமென்பதை இவரே நமக்குக் காட்டியிருக்கிறார். பிரதிவருஷமும் காங்கிரஸ் மகா சபையில் படித்தவர்கள் மாத்திரம் கூடிப் பேசுவதால் பயன் ஒன்றுமில்லை யென நமக்குத் தெரிந்திருந்தும், நாமெல்லோரும் ஸ்வகாரியப்புலிகளாகவே வாழ்ந்து வந்ததால், அதற்குமேல் நாம் எதையும் செய்யாமலே இருந்துவிட்டோம். ஆயின் கடைசியில் மகாத்மா காந்தியென்பவர் ஒருவர் இவ்விந்தியாவில் தோன்றி, இந்தியர்களுடைய நன்மைக்காகவே இப்பொழுது மிக்கக்கடுமையானதோர் தபஸ் புரிந்து வருகின்றார்.

இந்தியாவுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தைப் பெறுவதென்றால், நமது ஆண்மையையும், தீர்மானத்தையும், அஞ்சாத மன அழுத்தத்தையும் ஆங்கிலேயர்களுக்குத் தெளிவாய் நாம் காண்பிக்கவேண்டும். நம்மை ஆண்டுவருகின்ற பிரிடிஷ் ஜனங்களிடம் நாமும் நிர்ப்பயமாகவே நடக்கத்தவறினால், நமது எண்ணங்களொன்றும் என்றைக்கும் கைகூடமாட்டா. பேச்சுவாயர்களிடமும் பிரிடிஷார் பயப்படுவதுமுண்டு. ஆகிலும் தமது காரியங்களைச் செய்து முடிப்பதில் ஒரே ஆவலுடன் எதையும் துறக்கவும் இறக்கவும் தயாராக இருப்பவர்களிடம் இவ்வாங்கிலேயர்கள் முற்றிலும் வேறாகவே நடப்பார்கள். இப்பொழுது நம்முடைய ஸ்வராஜ்ய சம்பந்தமாய் மகாத்மா காந்தி செய்து வருவதும் இவ்வழியே தான். நமக்குரிதாகிய ஸ்வாதீனத்தைத்தவிர நாம் எதையும் விரும்பவில்லை யென்னும் விஷயத்தை பிரிடிஷ் ஜனங்களின் மனதில் படும்படி நாம் எவ்வாறு உறுத்த முடியும்? அவர்களோ ஐயாயிரம் மைலுக்கப்பால், இந்தியாவைப் பற்றி எவ்விதமான சிந்தையும் இல்லாமல், நம்மிடம் பரம உதாஸீனர்களாயிருந்து வருகின்றார்கள். பின்பு அவர்களை நாம் எழுப்புவதும் எப்படி? இதற்காகவே மகாத்மா காந்தி 'கதர்' என்னும் மந்திரத்தை நாள்தோறும், நிமிஷம் தோறும், நமக்கு பதேசித்து வந்திருக்கின்றார். மேலும் பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் இன்னும் கவர்மெண்டார் ஸ்தாபித்திருக்கின்ற நியாயஸ்தலங்களையும் நாம் முழுவதும் பஹிஷ்காரம் செய்வதும் தர்மமென்று இவர் வற்புறுத்தியதுமுண்டு. இவர் இவ்வாறு சொல்லி வந்ததின் நிமித்தம், இவரைப் பலர் பித்தனென்று கண்டித்துவருவது வழக்கமாகிவிட்டது. அவ்விஷயத்தை நாம் நமது புத்திக்கு எட்டியவரையில் இங்கே பரிக்ஷை செய்ய எண்ணுகின்றோம். இவ்வுலகத்தில் புத்திமான்களென அழைக்கப்படுகிறவர்கள் N. B. இருவிதம். எக்கஷ்டத்தையும் பொறுத்திருந்தாவது, காலதாமதமாகிலும் நேர்த்தியான பல பலன்களை அடைவதற்கு ஆயிரத்தில் ஒருவனுக்குக் கூட மனத்திடமையும். மெய்மையும். மேன்மையும் வாய்த்திருப்பது அரிதாகவே இருக்கும். நாளைப்பொழுதைப்போக்குவதிலேயே எப்பொழுதும் நாம் கருத்துள்ளவர்களாயிருக்கின்றோம். சீக்கிரத்தில் கிடைக்கும் சொல்ப லாபத்திற்காக நாம் எதையும் மறப்பது சகஜமல்லவா? ஆகிலும் வெகு காலத்திற்குப் பிறகும். எல்லையற்றதோர் பிரயத்தினத்தாலேயே நமக்குக்கிடைக்கக்கூடியதொரு கௌரவத்திலும், பரம சுகத்திலும், ஆனந்தத்திலும் நாம் எங்கு சுலபமாய் மோகித்துவிடுகிறோம்? மகா தைரியசாலிகள்தான் எக்கொடுமைகளையும் பாராமல், ஓர் அபாரமான பலத்திற்காகப் பொறையுடனும், பேராற்றலுடனும் உழைக்க முடியும். இவ்விந்தியாவுக்கு ஸ்வராஜ்ய சுதந்திரத்தை ஆங்கிலேயர்களிடமிருந்து நாம் பிடுங்குவதும் ஒரு விதத்திலும் இலேசான காரியமல்ல. இத்தேசத்தில், வரவு செலவு திட்டக்கணக்கு திருவிப்பதற்குள்ள எல்லாஅதிகாரங்களையும் கம்பெனிப் பிரிடிஷார், நாம் கேட்டமாத்திரத்தில், அளித்து விடுவார்களென்று நம்புவதுமுற்றும் அறிவினமே. தங்களுடைய பிரயோஜனத்திற்காகவே ஆங்கிலேயர்கள் இவ்விந்தி

யாவைக் கறந்து வருகையில், இந்தியர்களுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை அவர்கள் மனமொப்பி உடனே எப்படிக்கொடுப்பார்கள்? இதில் குழந்தைகள்போல நம்பிவருகின்றவர்கள்தான் பித்தர்கள் ஆவார்கள். ஸ்வராஜ்யமென்னும் மோக்ஷத்தை சீக்கிரத்தில் நாம் அடைவதற்கு ஆவலுடையவர்களாயின், அதற்காக எத்துன்பங்களையும் நாம் அனுபவிக்கவே வேண்டும். எள்ளளவும் சிரமப்படாமலே நாமும் நமது ஸ்வாதீனத்தைப் பெறக்கூடுமென நம்புவதுதான் அறிவின்மையே தவிர, மகாத்மா காந்தியைப் பித்தனென்று சொல்வது பிசகு. இக்கோடிக்கணக்கான இந்தியர்களிடம், இவருக்குமுன், இவ்வளவாக யார் அனுதாபம் காட்டியிருக்கிறார்கள்? தொழிலையும், பணத்தையும், சுகத்தையும், சௌக்கியங்களையும், மனைவி, மக்கள் முதலானவர்களையும், இம்முப்பதுகோடி ஏழை இந்தியர்களுக்காக இவருக்குமுன் முற்றிலும் துறந்திருக்கின்றவர்கள் யார்? வெறுமையில் தவிப்பவர்களின் விதியைத் தானும் மேற்கொள்ளத் தயங்காது, அவர்களைப் போலவே கலப்பையைப் பிடித்து நமக்குள் யாரேனும் இவருக்குமுன் உழுது வந்ததுண்டோ? பிறருக்குத் தான் உபதேசிக்கும் தத்வங்களை இவரைப்போல யார்தான் இதுகாறும் காரியத்தில் நடத்தியும் காண்பித்திருக்கிறார்கள்? சோற்றுக்கும் துணிக்கும் ஒருவனுக்கு இருந்தால் போதுமென்னும் நியாயத்தைக் கைப்பிடித்து, இந்தியர்களெல்லோரும் இந்தியாவிலேயே நூற்று நெய்யவேண்டுமென இவர் கண்டுபிடித்ததற்கும் நாம் எவ்வளவாகக் களிப்படையக் கடமைப்பட்டிருக்கிறோம்? பங்காளத்தில் டாக்டர் P.C. ராய் தானாகவே கிராமங்கள் தோறும் இடைவிடாமற் சென்று, இந்தியர்கள் எல்லோரும் நூற்று நெய்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டுமெனச் சொல்லிவருகின்றாரென்றால், அவரும் ஒரு பித்தனது வார்த்தைகளிலா முழுவதும் அஞ்ஞானத்தால் நம்புகின்றார்? ஓர் பித்தனது பைத்தியத்தால், இங்கிலாண்டிலுள்ள வியாபாரிகளுக்கு லக்ஷக்கணக்காய் நஷ்டங்கள் நேர்ந்தும், மேலும் அவர்கள் அவனுடைய செயல்களைக்கேட்டு நடு நடுங்குகிறார்களாகில், நாமும் அவனைப்போலவே பித்தர்களாயிருக்கக் கொடுத்துவைத்திருக்க வேண்டுமல்லவா? மகாத்மா காந்தி பித்தனல்ல. ஆங்கிலேயர்களைத் திருப்தி செய்தும், மேலும் ஸ்வநயம் பாராட்டியும், ஒவ்வொரு வருஷமும் மூன்றல்லது நான்கு நாள் காங்கிரஸில் கூடிப் பேசிவிடுவதால் இந்தியாவுக்குரிய ஸ்வராஜ்ய சுதந்திரத்தைத் தாம் கொண்டுவர முடியுமென்று இதுவரையில் நினைத்துவந்த பித்தர்களுள் மகாத்மா காந்தியும் ஒருவரல்ல. இப்பெரியதேசத்தில், ஜனங்களெல்லோரும் தாங்களணிந்துவரும் துணிகளுக்காக வேறுதேசங்களை யெதிர்பார்த்து நின்றுகொண்டும், மற்றும் அவைகளின் நிமித்தம் அளவற்றதோர் ஐசுவரியத்தை அன்னியர்களுக்கு, வேறு வழியொன்றுமில்லாமல், வாரியிறைத்துக்கொண்டிருக்கும் பொழுது, இந்தியாவுக்கு ஸ்வராஜ்யத்தைத் தேடித்திரிகின்ற பித்தர்களுள் இவரும் ஒருவரல்ல. இந்தியர்களுக்கு ஸ்வய ஆக்ஷியெனில், அவர்களுக்குள் என்றும் நீடித்திருக்குமோர் ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கு முற்றும் மறந்துவிட்ட பைத்தியக்காரர்களில் மகாத்மா காந்தியும் ஒருவரில்லை. நம்மிடத்திலேயே பஞ்சமர்களென்னும் ஓர் வித்தியாச புத்தியும் இருக்கும்போது, நம்மையும் பிரிடிஷார் நமது தேசத்தில் பறையர்களைப்போலவே குரூரமாக நடத்தி வருகிறார்களெனக் குறைகூறும் பைத்தியமும் இவரிடத்தில் கொஞ்சமேனும் காணப்படவில்லை. தவிர நமக்கும் மேல் யஜமானர்களாகவே இருந்துவரும் பிரிடிஷ் ஜனங்களைத் தமக்கு சரிசமானமானவர்களென்றும் பல பித்தர்களைப்போல் மகாத்மா காந்தி நினைக்காததும் பாபமோ! இவர்தான் நமது ஸ்திதியை உண்மையாகக் கடைசியில் கண்டுபிடித்திருக்கின்றார். இந்தியர்களான நாம் அன்னியர்களிடம் இவ்வாறு சிறுமைப்பட்டு வருவதையே இவருக்குப்பார்க்க சகிக்கவில்லை. அதுதான் இவரது பைத்தியத்திற்கு முக்கிய காரணமாகும். இவ்விந்தியாவில் ஒருவேளை உணவுக்கும் திண்டாடியே வருகின்ற இக்கோடிக்கணக்கான ஏழைகளிடம் இவருக்கிருக்கும் வரம்பற்றதோர் தயவுதான் இவரது பைத்தியத்திற்கும் மற்றொரு காரணமாயும் இருக்கின்றது. இவ்வுலகத்தில் நாம் நேராகப் பிழைப்பதற்கே இவர் பல உபாயங்கள் சொல்லிவருகின்றார். ஆகினும் நம்முடைய ஸ்வநயத்தாலேயே அவைகளெல்லாம் நமக்கு விஷமாகவும், பிதற்றல்களாகவும் தோன்றுகின்றன. பித்தர்களிடத்தில் ஆங்கிலேயர்கள் ஒருபோதும் திகில் அடைந்ததில்லை. இந்தியாவிலும், இங்கிலண்டிலும் பிரிடிஷ் ராஜ்ய தந்திரிகள் இவரைக்கண்டு நடுக்கமுற்றதை நாம் நன்றாகவே அறிவோம். மகாத்மா காந்தி பித்தனல்ல. மேலும் இன்னமும் நாளாக ஆக இவருடைய, பெருமை தானாகவே எல்லோருக்கும் தெளிவாய் விளங்கும்.

ராஜாங்கக் கைதிகள்

பூனா நகரத்தில் இப்பொழுது கூடப்போகும் பம்பாய் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில், ஸ்ரீமான் த்ரிவேதி என்னும் மெம்பர், அக்கவர்மெண்டார் மகாத்மா காந்தியை ஓர் பிரபலமான ராஜாங்கக் கைதியாய் நடத்தவேண்டுமென்று, கேட்டிருக்கிறார். இவரைப்போலவே, ஸர்தார் முடலிக் என்பவரும், இந்தியாவில் ராஜாங்க விஷயத்திற்காக தண்டனை யடைந்தவர்களெல்லோரும், சாமான்ய குற்றவாளிகளைப் போலல்லாது, ஜெயிலில் மரியாதையுடன் கவனிக்கப்பட்டு வருவது அவசியமென்றும் மேலும் பம்பாய் கவர்மெண்டார் அதை ஒத்துக்கொள்வதுடன், அப்படியே அவர்களை நடத்திவரவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார். மகாத்மா காந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்களில் 20,000 பெயர்கள் ஜெயிலில் கிடந்து வருந்துவதைப்பற்றி பிரிடிஷ் பார்லிமெண்டில் Mr. பென்ஸ்பூரும், கர்னல் வெஜ்வுடும் பிரசங்கம் செய்ததை, நமதன்பர்கள் நன்றாய்ப் படித்திருப்பார்கள். இவ்வளவாயிரம் இந்தியர்களை இந்தியா கவர்மெண்டார், சாதாரணமான கைதிகளைப் போலல்லாமல், நேராக நடத்துவது முக்கியமென கர்னல் வெஜ்வுட் சொல்லியிருக்கின்றார். இவர்களைப் போன்றவர்களை பிரிடிஷ் கவர்மெண்டார், இந்தியாவில் போல, இங்கிலண்டிலும் கடுமையாக நடத்தி வருவார்களாயின், பார்லிமெண்ட் மெம்பர்கள் அக்கவர்மெண்ட் மந்திரிகளை ஒரு நொடியில் வீட்டுக் கனுப்பிவிடுவார்கள். இங்கிலண்டில் ராஜாங்கக் கைதிகளைப் பற்றியதோர் சட்டம் தனியாகவே இருக்கின்றது. அதைப்பார்த்துதான், இந்தியாவிலும் அதைப்போலவே ஒரு சட்டம் இருப்பதும் இன்றியமையாததென்று நாம் நம்புகிறோம். தேசாபிமானத்தால், மிகவும் உயர்ந்த குணமுள்ளவர்களும் இக்காலத்தில் ஜெயிலிலடைபட்டிருக்க நேர்ந்திருக்கின்றது. அவர்களை ஒழுங்காய் நடத்துவது கவர்மெண்டாரின் பொறுப்பாகும். அஃதல்

லாமல் அவர்களிடம் குரூரமாகக் கடுமைகாட்டுவதால், ஆங்கிலேயர்களிடத்தில் அவர்களுக்குள்ள துவேஷமும் வெறுப்பும் இன்னு மதிகமாக முற்றி வருவதில் சந்தேகமேயில்லை. இதனால் பிரிடிஷாருக்குத்தான் பிரமாதமாய் நஷ்டங்களுண்டாகும். இவ்விஷயமாக Mr. பென்ஸ்பூரும் கர்னல் வெஜ்வுடும் காமன்ஸ் சபையில் பேசியிருப்பதை இந்தியாவிலுள்ள சகல பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்பார்களாக.

"ஒன்றுக்கும் உதவாதது"

ஸ்ரீமான், M. R. ஜயகர்.

பம்பாய் ஹைகோர்ட்டிலிருக்கும் மிக்கக்கியாதி பெற்ற பாரிஸ்டர்களுள் ஒருவரான Mr. ஜயகர் சென்ற பதினெட்டு மாதமாய் காங்கிரஸ் ஆணைக்குக் கீழ்ப்படிந்தே தனது வக்கீல் தொழிலை நடத்தாமல் விட்டிருந்தார். ஆகிலும் இப்போது மீளவும் தன்னுடைய தொழிலை நடத்த ஆரம்பித்திருக்கிறாரானதால் பின்வரும் கடிதத்தை அவர் வெளியிட்டிருப்பது நம்மால் கவனிக்கப்படவேண்டும்.

"எனது உத்தியோகத்தைத் துறந்தபொழுது தேசகைங்கரியத்திற்காகவே யதேச்சையாய் நான் முழுவதும் உழைக்க எண்ணியிருந்ததுண்டு. அத்தருணத்தில் இந்தியாவில் எங்கும் தேச விசுவாச மென்ற வெள்ளம் கரைபுரண்டு ஓடிவந்தது. ஒருகாலத்தில் கல்விவிஷயமாய் நான் நிரம்பவும் ஊக்கமுள்ளவனாகவே இருந்திருக்கிறேன். ஆனதால் தான் பம்பாய் நகரத்தில் ஓர் உயர்ந்த கலாசாலையை ஸ்தாபிப்பதற்குப் பேராவல் எனக்கு உண்டாயிற்று. அவ்வேலையை முடித்து, நான் திரும்பவும் பம்பாய் ஹைகோர்ட்டுக்கே எனது தொழிலுக்காகப் போக எண்ணங்கொண்டிருந்தேன். ஆயின் பல சத்துருக்களின் சூழ்ச்சிகளால் நான் நினைத்தபடி அக்கலாசாலையை ஸ்தாபிப்பது முடியாமலேயே முடிந்தது. இவ்விஷயத்தைப் பற்றி இப்பொழுதொன்றும் நான் பகிரங்கமாய் சொல்வதற்கு இல்லை. ஆயின் ஒத்துழையாமையென்ற வியாஜத்துடன் இது வரையில் நடந்திருப்பதெல்லாம் வெளியாகும் பொழுது அக்கலாசாலை சம்பந்தமாயும் சகல காரணங்களும் வெட்டவெளிச்சத்தில் எல்லோருக்கும் தெரியக் கூடும். பின்பு, என்மனதுக்குப் பிடித்த வேலையொன்றும் கிடைக்கவில்லை. * * * * * கோர்ட்டுகளையும், காலேஜ்களையும் ஒதுக்கிவைப்பது கொஞ்சமேனும் பயன்படமாட்டாது. இதையே நான் கடைசியில் நன்றாய்க்கண்டு பிடித்தேன். பஹிஷ்கார மென்பது அறிவீனமாகும். *, * * * இப்போது நானிப்படிச் செய்ததற்காக, என்னை மிகவும் நிந்திப்பார்கள். ஆகிலும் தேச நன்மையைக் கருதியே நானிவ்வாறு மாறியிருக்கின்றேன். * * * * ஒன்றுக்கும் உதவாத இக்காரியத்தில் பல ஆயிரம் இந்தியர்கள் சிறுவயதிலேயே இம்மாதிரியாக மடிப்பது துக்ககரமாயிருக்கின்றது. மகாத்மா காந்தி பக்கத்தார் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலும் புகுந்தாலொழிய, அங்கே தேசபக்தி எப்படி வளரும்? * * * காங்கிரஸ் ஆணைகளை மீறி நடக்க நான் ஸ்வப்னத்திலும் விரும்பியதில்லை. * * * * இதனால் நான் இனிமேல் காங்கிரஸ் கக்ஷியையும் சேர்ந்தவனில்லை யென்று சொல்வதும் பிசகாகும். எனது தேசத்திற்காக எப்பொழுதும் என் மனதுக்குப் பிடித்த துறைகளில் மனப்பூர்வமாய் உழைக்கக் காத்திருக்கின்றேன்."

Mr. ஜயகர் கேவலம் ஸ்வநயம் பாராட்டிவருபவரல்ல. மகாத்மா கக்ஷியிலேயே பதினெட்டு மாதகாலமாக, எல்லாவற்றையும் துறந்து உழைத்திருக்கின்றார். அவரும் இவ்வாறு மாறியிருப்பதால், அதற்கும் உண்மையாகவே காரணங்களிருக்க வேண்டும்.

ஹகீம் ஆஜ்மலுடைய வேண்டுதல்

இச்சென்னை மாகாணத்திலுள்ளவர்களுக்குப் பின் வருமாறு ஹகீம் அஜ்மல் கான் தன்னுடைய பிரார்த்தனையை அறிவித்திருக்கின்றார்:—

"இன்றையதினம் இச்சென்னை ராஜதானியில் நான் வந்து இருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். இந்தியாவின் முன்னேற்றத்தின் நிமித்தம், இம்மாகாணத்தில் இருப்பவர்கள் இன்னமும் தீவிரமாய் உழைத்தே வருவார்கள். அறிவுக்கும், ஊக்கத்திற்கும் அவர்கள் இதுகாறும் புகழ்பெற்று வந்திருப்பதில் எனக்கெவ்வித ஆச்சரியமும் இல்லை. நவீனகல்வியில் மிக்க அக்கரை பாராட்டி, மேலும் அதில் மிகுந்த தேர்ச்சியையும் அடைந்திருப்பதால், அவர்களை இக்காரியத்தில் முன்வந்து பேராண்மையுடன் எல்லாவற்றையும் நடத்த வேண்டும். ஆயின் இதுவரையில் தங்களது பொறுப்பை அவர்கள் முழுவதும் உணர்ந்து தைரியத்துடன் வகிக்காததுபற்றி நான் நிரம்பவும் வருத்தப் படுகிறேன். இருந்தாலும் இம்மாகாணவாசிகள் தங்களுடைய கடமையை நன்றாய் அறிந்து கொண்டு, இத்தருணத்தில் உடனே எழுந்து நின்றும், தமது நுண்ணறிவால் பேராற்றலுடன் இவ்விந்தியாவைக் காப்பாற்றச் சிறிதும் தயங்க மாட்டார்கள். ஹிந்துக்களும், மகமதியர்களும், தங்களுடைய நாட்டின் க்ஷேமத்திற்காகவே, மகாத்மா காந்தி, லாலா லஜபதிராய், தேசபந்து C. R. தாஸ், மௌலனா மகமதலி, மௌலனா ஷௌகதலி, மௌலனா அப்துல் கலாம் அஸாத், இவர்களும், மற்றும் பல ஆயிரம் இந்தியர்களும் ஜெயிலில் தள்ளுண்டு கிடப்பதை, இந்த ராஜதானியில் முற்றிலும் மறந்து விடுவார்களா? இத்தேசாபிமானிகளின் கைங்கரியத்தை நாமல்லவோ முழுமையும் நடத்தி, மேலும் அவர்களது எண்ணத்தையும் தாளாண்மையுடன் ஸாதித்து வைக்கவேண்டும்! சகோதரர்காள்! நீங்கள் இனிமேலும் இவ்வாறு உறங்குவது அழகல்ல. காங்கிரஸ் ஆணைகளை மனப்பூர்வமாய் நடத்துங்கள். தேசகைங்கரியத்திற்காக எதற்குமஞ்சாத நெஞ்சம் படைத்தவர்களாய் கதர் துணியையே அணியுங்கள். மேலும் மகாத்மாவின் ஆஞ்ஞைகளையும் இந் நாடெங்கும் விடாது பரவச் செய்யுங்கள்."

Pandit மோதிலால் நேரு

சென்றவாரம் Pandit மோதிலால் நேரு, ஹகீம் ஆஜ்மல் கான், Mr. படேல், டாக்டர் ஆன்ஸாரி முதலியவர்கள் இச்சென்னைக்கு வந்திருந்தார்கள். மகாத்மாவின் கைங்கரியார்த்தமாகவே கவர்மெண்டாரின் சட்டதிட்டங்களை இந்தியாவிலுள்ள ஜனங்கள் எவ்வளவுதூரம் மறுக்கக்கூடுமென விசாரிப்பதற்கு இவர்கள் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கின்றனர். சென்ற ஜூலை மாதம் 25-ம் தேதி செவ்வாயன்று காலை பம்பாய் மெயிலில் வந்திறங்கினார்கள். ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் திரளற்ற ஜனங்கள் இவர்களை வரவேற்பதற்காகக் கூடியிருந்ததை நாம் மறக்க முடியவில்லை.

ஸ்ரீமான்கள் S. ஸ்ரீநிவாசய்யங்கார், T. பிரகாசம், K. நாகேசுவரராவ் பந்துலு, A. ரங்கஸ்வாமி அய்யங்கார், E. V. ராமஸ்வாமி நாயகர், இன்னும் மற்றவர்களும் இவர்களை எதிர்கொண்டு அழைத்தார்கள். அன்றயதினம் சாயந்திரமே சமுத்திரக் கரையில் ஓர் பெரிய மீட்டிங் நடைபெற்றது. அங்கே Pandit மோதிலால் நேரு பேசியதிலிருந்து சிலவற்றை இங்கே நாம் எடுத்தெழுதுகின்றோம்.

"மகாத்மா கக்ஷியைச் சேர்ந்தவர்கள் இப்போது முற்றிலும் அடங்கிவிட்டார்களெனப் பலர் சொல்லிவருவது பிசகேயென்று Mr. S. ஸ்ரீநிவாஸய்யங்கார் வற்புறுத்துகின்றார். அது மிகவும் பொருந்தும். ஏனெனில் இப்பெருத்த கூட்டத்தைக்கண்ணுற்றவர்கள் அப்புளுகை எவ்வாறு நம்பமுடியும்? மகாத்மாவின் பக்கத்திலிருப்பவர்கள் சற்றும் ஒடுங்கவில்லை. தவிர, அவர்களது எண்ணம் முழுவதும் நிறைவேறும் வரையில், ஒரு நிமிஷமேனும் சும்மாக இருக்கமாட்டார்கள். ஆகிலும் மகாத்மா காந்தியின் வலிமையெல்லாம் ஓய்ந்துவிட்டதென்றே ராஜ்யதந்திரிகள் பலர் கூறிவருகின்றனர்! அவர்களும் குற்றமற்ற யோக்கியர்களே! * * * * * மகாத்மாவின் பேராற்றலோ இறந்துவிட முடியும்! ஒருக்கால் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் அவ்வன்மை காணப்படாது இருக்கலாம். இன்னும் H. E. வைஸ்ராயளித்துவரும் விருந்துகளுக்குச் செல்கின்றவர்களிடமும் அஃது ஒடுங்கியிருக்கக்கூடும். இருந்தாலுமென்ன? லக்ஷக்கணக்கான இந்தியர்களின் ஹிருதயத்தில் அவ்வாற்றல் இன்னமும் வேகத்துடன் பொங்கியே வருகின்றது."

"ஸ்வராஜ்யத்தை அடையும் விஷயத்தில், மகாத்மா காந்தியுடைய உபதேசங்களை நாம் மூன்று முக்கியமான வழிகளில் அனுசரிக்கவேண்டும். முதலாவது, இந்தியர்கள் எவ்விதத்திலும் ஒற்றுமையுடன் இருப்பதே இன்றியமையாதது. ஹிந்துக்களும் மகமதியர்களும், பிராமணர்களும் பிராமணர்களல்லாதவர்களும், இன்னும் மற்றவர்களும், ஒருமைப்பட்டு இவ்விந்தியாவில் வாழ்ந்துவருவார்களாக. ஒரே மனதுடன் இந்தியர்களெல்லோரும் தங்களுக்கு சொந்தமான ஸ்வராஜ்ய சுதந்திரத்தை அடைவதற்குத் தீர்மானமாக இருப்பார்களேயாகில், அவர்களை அடக்க எக்கவர்மெண்டாருக்கும் இவ்வுலகில் சக்தியில்லை. இம்மாகாணத்தில் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதவர்களுக்கும் உள்ள மனஸ்தாபங்கள் கொழுந்துவிட்டு எரிகின்றன. மதங்களைப் பற்றிப் பேசுவதற்கு நான் ஓர் அவதார புருஷனல்ல. ஆகிலும் நமக்குள் முழுவதும் ஒற்றுமையென்பதொன்று இல்லாமலே, நாமென்றைக்காவது ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தைப்பெறக்கூடுமென எவன்தான் நம்புவான்? பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஸௌஜன்யமென்பது சிறிதேனும் இல்லாதிருக்கும்பொழுதும், மேலும் பறையர்கள் என்றதோர் பாபத்திற்காக இவ்வளவாயிரம் ஜனங்கள் தூரத்தில் ஒதுக்கியே வைக்கப்பட்டிருக்கும்பொழுதும், நாம் ஸ்வராஜ்யத்திற்காகப் பாடுபடுவதில் பிரயோஜனம் என்ன? * * * * * * இம்மாதிரி நாம் லக்ஷக்கணக்காய்க் கூடிப் பேசுவதிலும் ஒரு உபயோகமுமில்லை. * * * * * சில மாதங்களுக்குமுன் காமன்ஸ் சபையில் மந்திரியாயிருந்த Rt. Hon. மாண்டேகூ இந்தியா சீர்திருத்த சட்டத்தைப்பற்றிப் பேசுகையில், அவர் சொன்னதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்போம். 'இவ்வுலகத்திற்குள் மிக்கத் தீர்மானக்காரர்களான பிரிடிஷாரிடம் இந்தியர்கள் இனிமேல் ஜாக்கிரதையுடன் நடக்கட்டும்' என்று Mr. மாண்டேகூ பயமுறுத்தியிருக்கின்றாரல்லவா? தீர்மானமென்னும் ஐசுவரியம் நமக்கும் உள்ளதென்பதை நாம் காண்பிப்போம். நமது வழியில் இவ்வாறு இடையூறுகளாக நிற்கும் இம்மத பேதங்களையும் நாம் அகற்றாமலேயே இருந்தால், நாம் சொல்வதையும் எவரும் நிஜமாக மதிக்கமாட்டார்கள். அதனால் இத்தேசத்தில் இருப்பவர்களெல்லோரும், தமக்குள் இருக்கும் வித்தியாசங்களையொழித்து, ஐக்கியத்துடன் வாழ்ந்துவருவது முக்கியமெனத் திரும்பவும் நான் இங்கே வற்புறுத்துகின்றேன்."

"மகாத்மாவின் ஆணைகளுக்குள், கதர் துணியை நாடெங்கும் நாம் உடுத்துவருவதே மற்றொரு முக்கியமான அம்சமாயிருக்கின்றது. 'கதர் துணிகளுக்கு இப்பெருமையும் ஏன்,' என்னும் விஷயத்தைப்பற்றிப் பல விடங்களில் நான் பேசியிருக்கிறேன். ஆகிலும் இன்றையதினம் அதை நான் மறுபடியும் இங்கே சொல்வதற்கு எண்ணங்கொள்ளவில்லை. இருந்தாலும், மேல் நாட்டுத் துணிகளைப்பார்க்கிலும் கதரே மலிவாயிருப்பதை எப்படியும் ஒத்துக்கொள்வீர்கள். கதரை அணிவதால் வேறொரு மனுஷ்யனாகவே எவனும் மாறிவிடுவான். அதைத்தான் நானும் அனுபவித்திருக்கின்றேன். இப்படிப்பட்ட 'மீடிங்' களில் மாத்திரம் அல்லாமல், எப்பொழுதும் கதர் துணிகளையே உடுத்து வருவதால், மகாத்மா காந்திகக்ஷியைச் சேர்ந்தவர்களென்னும் அறிவு நன்றாக மனதில் பதிந்திருக்கும். விசேஷமாய், நமது ஸ்வராஜ்ய விருதத்திற்குக் கதரே ஓர் ஒப்புயர்வற்ற கங்கணமாகவும உதவிவருகின்றது."

"மேலும் காங்கிரஸ் மெம்பர்களாகவும் இங்கிருப்பவர்களெல்லோரும் உடனே சேருவதும் முற்றிலுமவசியம். பதினாயிரக் கணக்காகவும், லக்ஷம் லக்ஷமாயும் நீங்கள் காங்கிரஸ் மெம்பர்களாக ஆகவேண்டும். அப்படிச் செய்வதால் நமது தீர்மானத்தையே நாம் தெளிவாகக் காட்டுவோம். இதன் சம்பந்தமாய் இதுகாறும் நாம் ஊக்கத்துடன் நடக்கவில்லை. காங்கிரஸ் மெம்பர்கள் இன்னும் அதிகமாக விருத்தியாவதால், அக்காங்கிரஸ் மகா சபையின் ஆத்ம சக்தியும் மேன்மேலும் ஓங்கி நிற்கும். மேலும் ஸ்வராஜ்யமும் நமக்கு சீக்கிரமாகக் கிட்டுவதற்கு இதுவும் ஓர் ஒத்தாசையாயிருக்கின்றது." * * * * * * * மகாத்மா காந்தி இக்ஷணத்தில் ஜெயிலில் தள்ளப்பட்டு இருக்கிறார். இவ்விந்தியாவைச் சுற்றிலும் பன்முறைப் பிரயாணம் செய்து, இத்தேசத்தின்கண் எங்கும் விதைகளை இறைத்துவிட்டுப் பின்பு அவைகளுக்கென்ன நேரிடுமென்பதைப் பார்க்கவே சிறையில் காத்திருக்கின்றார். இப்பொழுதுதான் நீங்களெல்லோரும் உண்மையாய் நடப்பதற்குத் தருணம் வாய்த்திருக்கின்றது. அவர் ஜெயிலிலிருந்து சமீபகாலத்திற்குள் வெளிக்கிளம்புவதும் உங்களுடைய யத்னத்தையே பொருத்ததாகும். ஆறு வருஷமும் மகாத்மா காந்தி சிறையிலா கிடக்கப்போகிறார்? நான் அப்படி நினைக்கவில்லை. எங்களது விசாரணைகள் முடிந்தவுடன், நாம் மேலும் செய்துமுடிக்க வேண்டியவைகளைப் பற்றி ஒருவிதமாக நிச்சயிப்போம். பிறகு நமது காரியங்களால் மகாத்மா காந்தி எளிதாகவே விடுதலையடைந்தவராக, நம்மை மறுபடியும் வெற்றிக்கொடியுடனே நடத்திச் செல்வாரென்பதில் எனக்கு அணுவளவும் சந்தேகமில்லை."

புயற் காற்று

(இராமேசன் கல்கத்தாவில் சட்ட பரீக்ஷைக்கு வாசிக்கும்போது அண்டை வீட்டிலிருந்த அந்நத பாபுவின் குமாரத்தியும் தன் நண்பன் யோகேந்திரனுடைய சகோதரியுமான ஹேமநளினியைக் காதலித்ததும் அக்ஷயன் என்ற பையன் அவனுக்கு ப்போட்டியாக அங்கு வந்துகொண்டிருந்ததும், இராமேசனுடைய தகப்பனார் திடீரென வந்து அவனை ஊருக்கு அழைத்துச்சென்று அங்கே அவனிஷ்டத்திற்கு விரோதமாக அவனுக்கு மணம் செய்வித்ததும் கல்லியாணமாகி ஊருக்குத்திரும்ப வரும்போது புயற் காற்றால் ஓடங்கள் கவிழ்ந்ததும் ஒரு சிறுபெண்ணும் இராமேசனுமே தப்பிப்பிழைத்ததும் அந்தப்பெண்ணை முதவில் தன் மனைவி என்று இராமேசன் நினைத்து அவளைக் காதலிக்க ஆரம்பித்ததும் பிறகு அவள் தன் கல்லியாணம் கழிந்து ஊருக்கு வரும்போது ஓடம் கவிழ்ந்ததில் தப்பிப்பிழைத்த வேறு ஒரு பெண், தன் மனைவியல்ல என்று இராமேசன் அறிந்ததும் அவளுக்கு இதை இப்போது தெரிவிக்ககூடாது என்று கல்கத்தாவிற்குக் கூட்டி வந்து பெண்பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு தனியேகுடியிருந்து வக்கீல் வேலை பார்க்க ஆரம்பித்த வரை சென்ற 'தமிழ் உலகு' சஞ்சிகைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.)

கல்கத்தாவிற்குப் போய் அங்கேயுள்ள அலிப்பூர் கோர்ட்டுகளில் வக்கீல் வேலை பார்ப்பதென்று இராமேசன் நிச்சயித்திருந்தான். ஆனால் மனக்கவலையின் மிகுதியால் ஊக்கமற்று வக்கீல் வேலையின் துவக்கத்தில் வரும் அனுதரவை தீவரமான விடா முயற்சிகொண்டு வென்று முன்னுக்கு வருவதற்கு வேண்டிய முழு மனதோடு அவன் பிரயத்தனம் செய்யவில்லை. 'ஹௌரா' நதியின் பாலத்தருகிலும் "காலேஜ்" கட்டிடங்கள் இருக்கும் சதுரப் புறத்திலும் யாதொரு காரியமு மின்றியே சுற்றித் திரிவது ஒரு வழக்கமாயிற்று; மன அமைதி பெறுவதற்காக எங்கேயாவது சற்று கவலையற்று ப்போய் வரலாம் என்று ஒரு நாள் அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது அந்நதபாபு விடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு அவர் எழுதியிருந்தார்.

"உனக்குப் பரீக்ஷையில் பாஸானதாக 'கெஸட்' மூலமாக தெரியவந்தது; நீ இந்த சந்தோஷ சமாசாரத்தைப் பற்றி நேரில் அறிவிக்காதது அதிக வருத்தம் தருகின்றது. உன்னிடமிருந்து காகிதம் வந்து, வெகு நாளாயிற்று. உன்னைப்பற்றிய சமாசாரம் சொல்லுவாருமில்லை. ஆகையால் நீ இப்பொழுது எங்கிருக்கிறாய் என்றும் எப்பொழுது கல்கத்தாவிற்கு வருவாயென்றும் உடன் அறிவித்து உன்னுடைய பழைய சிநேகிதர்களின் கவலையை ஆற்றவேண்டும்."

அந்நதபாபு தனக்கு ஒருவேளை மாப்பிள்ளையாகக் கூடுமென்று நினைத்துக்கொண்டிருந்தபையன் இங்கிலாந்துக்கு சட்டபரீக்ஷைக்குப் படிக்கப்போனவன் பரீக்ஷையில் தேறி 'பாரிஸ்டர்' என்ற பெயர் பெற்று இந்தியாவிற்குத் திரும்ப வந்ததும் வேறொரு இடத்தில் அவனுக்குக் கல்லியாணமாய் விட்டது என்ற சமாசாரத்தை நாம் இங்கு குறிப்பிடுவது அவசியமல்லவா? இராமேசனே தனக்கு நேரிட்டவற்றை உத்தேசித்து, மறுபடி ஹேமநளினியோடு பழைய சிநேகம் பாராட்டிப்பழகுவது நியாயமல்ல என்று கருதினான்; என்னமாயினும், தனக்கும் கமலாவுக்கும் தற்காலத்தில் இருந்த உறவின் உண்மையை ஒருவரும் அறியக்கூடாது. அறிந்தால், பாவம், ஊரார் ஏச்சுக்கு இடமாவாள் அல்லவா? அப்படியிருக்க மறுபடியும் ஹேமநளினியோடு சேர்ந்து பழகத் தொடங்கினால் அவளிடம் இந்த உண்மையை வெளியிடாமல் மறைத்து வைக்கவும் கூடாது" என்று பலவாறான சந்தேகத்தில் உழன்றான்.

எப்படியானாலும் அந்நதபாபுவின் கடிதத்திற்கு பதில் போடத் தாமதிப்பது மரியாதைக்குறைவாகும் என்று பின் வருமாறு பதில் எழுதினான்: "நான் தங்களை நேரில்வந்து காணாததை மன்னிக்கவேண்டும். அநேக அசந்தர்ப்பங்களால் அது என்னால் கூடாது போயிற்று" என்று; ஆனால் கல்கத்தாவிலுள்ள தன்னுடைய புதிய விலாசத்தை மட்டும் கண்டெழுதவில்லை. இந்தக்காகிதம் எழுதியனுப்பிய மறுநாள் முதல் அலிப்பூர் கோர்ட்டுக்கு தினந்தோறும் போய் வரவேண்டும் என்று நிச்சயித்து கோர்ட்டுக்குப்போனான்; ஒருநாள் இராமேசன் கோர்ட்டிலிருந்து திரும்ப வரும்போது "அதோ, பார், அப்பா, இராமேச பாபுவை" என்ற சப்தம் அவன் காதில் விழுந்தது; அது யாருடைய குரல் என்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். "அடே! நிறுத்து, வண்டியை, நிறுத்து, நிறுத்து" என்ற சப்தமும் கேட்டது. உடனே ஒரு வண்டி இராமேசன் அருகில் வந்து நின்றது. அலிப்பூர் காக்ஷி பங்களாவுக்கு வேடிக்கையாகப்போய் திரும்பிவரும் அந்நத பாபுவும் அவர் மகள் ஹேமநளினியும் இவ்விதம் அகஸ்மாத்தாய் இராமேசனை சந்திக்க நேரிடவே, வண்டியில் ஹேமநளினியைக் கண்ணுற்ற இராமேசன் அவளுடைய அழகிய வதனத்தையும் உடைதரித்து கூந்தலை வாரி முடிந்து அலங்கரித்திருந்த மாதிரியும் அவள் கைகளில் அணிந்திருந்த சிறிய செறுக்கு வளையல்களும் சாதாபொன் வளையல்களும் ஆகிய எல்லாம் பழைய ஞாபகங்களைக் கிளப்பவே, மனங்குழம்பி வாய் திறவாமல் திகைத்து நின்றுவிட்டான்.

"என்ன இராமேசா" என்றார் அந்நதபாபு. "இப்பொழுது உன்னைக்கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருக்கிறதே. எங்களுக்குக் கடிதம் எழுதுவதைக்கூட விட்டுவிட்டாய். ஒருவேளை தப்பித் தவறி எழுதினாலும் உன் விலாஸத்தைக் கண்டெழுதுவதில்லை. அது இருக்கட்டும், நீ இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்? என்ன செய்துகொண்டிருக்கிறாய்?"

"இப்போதுதான் கோர்ட்டிலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கிறேன்" என்றான் இராமேசன்.

"அப்படியானால் எங்களுடன்வந்து கொஞ்சம் "டீ" சாப்பிட்டுவிட்டுப்போகலாமே."

இராமேசன் அறியாமலே அவன் முகம் மலர்ந்து விளங்கிற்று; இனிப் பின்வாங்கமுடியாது; வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு தனக்குண்டாயிருந்த சங்கோசத்தை ஒருவாறு போக்கடித்துக்கொண்டு தைரியத்துடன் ஹேமநளினியைப்பார்த்து 'சௌக்கியமா" என்று கேட்டான். அதற்கு அவள் நேர்விடையளியாமல் "பாஸாயிற்றென்றுகூட காகிதம் எழுதக்கூடாதா" என்று வினவ "இதற்கு என்ன பதில் அளிப்பது" என்று இராமேசனுக்கு தோன்றாததால், "உனக்கும் பாஸாயிற்று என்று தெரிந்துகொண்டேன்" என்று மட்டும் சொன்னான்.

ஹேமநளினி: (புன்னகையுடன்) "ஓஹோ அப்படியா, ஆனால் எங்களை முற்றும் மறந்துவிடவில்லை! ஞாபகமாவது இருந்தது காகிதம் எழுதாவிட்டாலும்."

அந்நதபாபு: "நீ இப்போது எங்கே இருக்கிருய்."

இராமேசன்: "தர்ஜி பாராவிலே"

அந்நதபாபு: ஏன், நீ முன் "காலுடோலா" வில் இருந்த இடம் சௌகரியமாக இருக்கவில்லையா?

இராமேசன் என்ன பதில் சொல்லப்போகிருன் என்று அதிக ஆவலுடன் அவனை உற்று நோக்கினுள் ஹேமநளினி. இராமேசன் அவளுடைய பார்வையின் குறிப்பை உணர்ந்து தன்மீது அவள் வருத்தமுற்று இருக்கிருள் என்பதை அறிந்து "இல்லை; நான் திரும்ப பழைய இடத்திற்கு வரப் போகிறேன்." என்ருன் முன்பின் யோசியாமல்; ஏனெனில், தான் முன் இருந்த இடத்தைவிட்டு தூரத்திலே வேறு ஒரு ஜாகைபார்த்துக்கொண்டு போனது பெருங்குற்றமென்று ஹேமநளினி கருதினுள் என்று இராமேசன் நன்குணர்ந்தான். அந்த உணர்ச்சியால், அவனுக்குத்தீரா மனந்துயரம் உண்டாயிற்று. எப்படி அந்த பெருங்குற்றத்தினின்றும் தப்புவது என்று அவனுக்கு அப்போது தோன்றவில்லை; நல்லவேளை, கேள்வி கேட்டு மடக்கக்கூடிய அந்நதபாபு மேன்மேலும் கேள்வி கேட்கவில்லை. ஹேமநளினியும் ரஸ்தாவை உற்றுநோக்குவாள்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தாள். ஆனல் இப்படி பேச்சு திடீரென்று ஓய்ந்ததை இராமேசனல் சகிக்கமுடியவில்லை. அவர்கள் கேட்காமலிருக்கும்போதே "ஹெடுவா" வில் என் உறவினர் ஒருவர் இருக்கிருர். அவர் அருகில் இருக்கவேண்டுமென்று "டார்ஜிபாரா"வில் வீடு பார்த்தேன் என்று சமாதானம் சொன்னுன். இவன் சொன்னது முழுப் பொய் அல்ல என்ருலும் அது சரியான முகாந்தரமாகத் தோன்றவில்லை. "ஹெடுவா" விலிருக்கும் தூர பந்துவை எப்பொழுதாவது போய்ப் பார்த்து விசாரிப்பதற்கு 'காலுதோலா" வெகு தூரமா என்ன? ஹேமநளினியோ ரஸ்தாவை உற்றுநோக்கக்குவதை விட்டு முகத்தைத் திருப்பவில்லை. பாவம், மேல் என்ன சொல்லலாம் என்று மூளையை உடைத்துக்கொண்டான் இராமேசன். ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் யோகன் எங்கே இருக்கிருன் என்று அந்நதபாபுவைப் பார்த்துக்கேட்டான். அதற்கு அவர் "அவன் பரீக்ஷையில் தேறவில்லை, இங்கே இருக்கப் பிடிக்காததால் ஊருக்குப் போயிருக்கிருன்."

இதற்குள் வண்டி வீடுவந்து சேர்ந்தது. பழைய இடத்திற்கு வந்ததும் பழைய ஞாபகங்கள் இராமேசனைச் சூழ்ந்து கவர்ந்துகொண்டன. அவன் மனம் ஒருபுறம் அமைதி அடைந்து இருந்தபோதிலும் விசனம் மற்றொருபுறம் அவனைப் பிடித்தது. பெருமூச்சுவிட்டு சற்றுநேரம் பேசாமல் இருந்தான். "வேலை அதிகம் இருந்தபோதும் இதுவரை நீ ஊரில் தாமதித்ததற்கு" என்று கேட்டார் அந்நதபாபு. இராமேசன்: "என் தகப்பனர் காலமாய்—"என்னு முன், "ஆ! அதென்ன! அதென்ன! என்ன செய்தது அவருக்கு."

"ஊருக்குத் திரும்பி வரும்போது 'பத்மா'வில் திடீரென புயற்காற்று எழும்பி ஓடத்தைக் கவிழ்த்துவிட்டது. அவர் மூழ்கிப்போய் விட்டார்."

திடீரென்று கிளம்பும் பெருங்காற்றுனது மேக ஜாலங்களைத் தன்முன் ஓட்டிச் சென்று ஆகாய மண்டலத்தை எவ்விதம் நிர்மலமாக்குகின்றதோ அவ்விதமே இந்த துக்க சமாசாரத்தைக் கேட்டதும் இராமேசனுக்கும் ஹேமநளினிக்கும் இடையே எழுந்து இருந்த மனஸ்தாபங்களெல்லாம் பறந்தோடின. "இராமேசன்மீது வீண்குற்றம் சுமற்றினேனே, அவன் பாவம், தகப்பனரை இழந்து மனம் நொந்து பலவகைக்கவலையுள் ஆழ்ந்திருக்கும் சமயத்திலே இன்னும் அந்த துக்கம் ஆறி இருக்காது அல்லவா? அப்படி இருக்க குடும்பத்தில் ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டனவோ? வேறு என்னகாரணம் இருக்குமோ? என்று எண்ணியிராமல் அவனைக் குற்றவாளி என்று கருதினேனே" என்று வருத்தம் அடைந்தாள் ஹேமநளினி. உடனே, இதுவரை அலக்ஷியமாய் இருந்ததை விட்டுவிட்டு உபசரிக்கத் தொடங்கினுள்.

இராமேசனுக்குப் பசிக்கவில்லை. ஆனல் ஹேமநளினி சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்தினுள். "உன் உடம்பு சரியாக வில்லையே, இப்படி உடம்பைக் கவனிக்காமல் இருக்கக் கூடாது" என்ருள். பிறகு அந்நதபாபுவைப்பார்த்து "அப்பா, இராமேசபாபு இன்றிரவு இங்கே சாப்பிட்டு விட்டுதான் போகவேண்டும்." என்ருள். அவரும் 'ஆம்' என்று வற்புறுத்தினுர். இந்த ஸந்தர்ப்பத்தில் அக்ஷயனும் அங்கு வந்துசேர்ந்தான். கொஞ்சகாலமாய் அந்நதபாபுவின் 'டீ' மேஜையில் அவனுக்கு எதிராளி இல்லை. இப்போது இராமேசன் திடீரென்று திரும்பவந்தது அவன் மனதிற்குக் கஷ்டமாயிருந்தது. இருந்தாலும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு, புன்சிரிப்புடன் "ஓ! இதென்ன, இராமேசபாபு, எங்களை முற்றிலும் மறந்து விட்டீரே," என்ருன் இராமேசனைப்பார்த்து. இராமேசனுக்கும் உள்ளுக்குள் சந்தோஷமில்லை. ஏதோ வெளிக்கு மட்டும் மெல்லின புன்னகை பூண்டு அவனை வரவேற்ருன்.

அக்ஷயன்: "அன்று உன்னை அவசரப் படுத்திக் கூட்டிக்கொண்டு போனதைப் பார்த்தால் கல்யாணமாகுமுன் உன் தகப்பனர் உன்னை விடமாட்டார் என்று தோற்றிற்றே! அதினின்றும் தப்புவித்துக் கொண்டாயா, என்ன?" என்று சொல்லுமுன் ஹேமநளினியின் கோபப்பார்வை அவன் மீது விழுந்தது. "அவன் தகப்பனர் போய்விட்டார், அக்ஷயா" என்ருர் அந்நதபாபுவும். இராமேசன் என்ன பதில் சொல்வது என்றும் உண்மை வெளிப்படுமோ என்றும் பயந்து முகம் வெளுத்ததை மறைத்துக் கொள்ள தலைகுனிந்து நின்ருன். அவனை கூட்டோடு கூடாய் இப்படி வருந்தச் செய்த அக்ஷயன் மீது கோபங்கொண்ட ஹேமநளினி பேச்சைமாற்றுபவளாய் "என்னுடைய புதிய சித்திரப் புஸ்தகத்தை நீ பார்க்கவில்லையே," என்று அந்த புஸ்தகத்தை எடுத்து இராமேசனிடம் காட்டி ஒவ்வொன்ருய் அதிலுள்ள படங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினுள்.

பேச்சினிடையே தாழ்ந்த குரலில் "புதிய வீட்டில் தனியே தானே இருக்கிருய்" என்று இராமேசனைக்கேட்கவே, அவனும் 'ஆம்,' என்ருன். "சரி, இனி கூடியசீக்கிரத்தில் உன் பழைய இடத்திற்கு வந்து விடவேண்டும்." "எது எப்படியானுலும் அடுத்த திங்கட்கிழமை யன்று கட்டாயமாய் வந்து விடுகிறேன்" என்று வாக்குக் கொடுத்தான் இராமேசன்.

"எனக்கும் பி. ஏ. பரீக்ஷைக்கு வேண்டிய தத்துவ சாஸ்திரத்தையும் நீ தான் அப்போதைக்கப்போது சொல்லித்தர வேணடும்." என்ருள் கபடமற்றவள்போல். இராமேசனுக்கு உள்ளும் புறமும் பூரித்தது.

வரப்போகும் யுத்தங்கள்

இவ்வுலகத்தில் இன்றுவரையில் அரசர்களுக்குள் முற்றிவந்திருக்கும் மனவருத்தங்களுக்கெல்லாம் யுத்தமே பரம ஔஷதமாய் உதவியிருக்கின்றது. சத்துருக்களிருவர்கள் ஒருவரோடொருவர் அருகாமையிற் சேர்ந்து எங்கேயும் உயிருடன் வெகுகாலம் வாழ்ந்து வந்ததில்லை. துவேஷமென்பது ஆவியையும் மாய்க்கும் தன்மை வாய்ந்ததாக இருப்பதை நாம் நன்ருய் அறிவோம். உடல், பொருள் இவ்விரண்டுக்குங் கேடுகள் உண்டாவதைப்பார்க்கிலும், பகையென்னும் காரணத்தால் உள்ளமும் துருப்பிடித்து, மனிதர்கள் சிறிதும் கடைத்தேற முடியாமல் அலைவதைக் காண்கின்ருேம். தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில், அப்பாரத மகாயுத்தம் முடிந்தபின்பும், மகாத்மாவான யுதிஷ்டிரர் தனக்குக்கிடைத்த ராஜ்யத்தில் எள்ளளவும் பற்றுதலில்லாமல், வெறுப்பையே அடைந்தவராய், மகாப்பிரஸ்தானம் சென்ருர். மனதென்பதொன்று இருக்கின், அஞ்ஞானத்தால் துவேஷம் பாராட்டி வருகின்றவ னெவனும் பிற்பாடு பச்சாத்தாபமடைவது நிச்சயமே. பகையென்ற விஷயத்தைப்பற்றி இங்கே நாம் தத்வோபதேசம் செய்ய எண்ணவில்லை. ஆகிலும் இத்தருணத்தில் 'ஜீஸஸ் க்ரைஸ்ட்', கௌதமபுத்தர் இவர்களது திவ்வியவார்த்தைகள் மிகப்பொருத்தமுள்ளவையாகவே தோன்றுகின்றன. வெறுப்பு, பகை முதலிய பாபவிதைகளை மனதிலிருந்து முற்றும் களைந்து விடவேண்டுமென எப்பெரியோர்களும் கூறியிருக்கிருர்கள். 'உன்னை ஒருவன் வலதுகன்னத்திலடித்தால், உன்னுடைய இடதுகன்னத்தையும் அவனுக்குக் காட்டுக,' என்று க்ரைஸ்ட் மன்னன் வற்புறுத்திஞன். இதைத் தான் மகாத்மா காந்தி இதுகாறும் ஒரு நிமிஷமேனும் விடாது பின்பற்றிவந்திருக்கின்ருர். தென்னுபிரிகாவில், தன்னைத் தலையிலடித்துத்தள்ளி, தனது இரு பற்களையும் சிதறச்செய்ததோர் மகமதியன்மீது அவர் கருணையுடனே நடந்ததொரு ஆச்சரியத்தை இப்பூமண்டலத்தில் என்றைக்கும் கொண்டாடியே வருவார்கள்.

ஒருவனுடைய சக்திகளெல்லாவற்றிலும் எவ்வித வியாஜமும் அற்ற அன்பே மிகவும் பலனைத்தருவதாகும். சச்சரவுகளால் ஒருபோதும் சுகமுண்டாகமாட்டாது. அரசர்களுக்குள் கிளம்பும் வித்தியாசங்களை யுத்தம் செய்தே தீர்த்துக்கொள்ளுவது தான் பெரும்பாலும் வழக்கமாக இருக்கின்றது. அஃதன்றி அவர்கள் இணக்கத்துடன் தங்களது மனஸ்தாபங்களை ஆற்றுவதென்பது மிக்க அருமையே. ஐரோப்பாவிலுள்ளவர்கள் தங்களாலியன்றமட்டில் யுத்தம் செய்யாமலேயே இராசியாகப் போவதற்கு முயன்றதுண்டு. ஆயினும் சர்வ காலங்களிலும் அது பலித்ததில்லை. அமெரிகாவில் ஆண்ட்ரு கார்னகி யென்னும் ஓர் கோடீசுவரர் இருந்தார். அவர்தான் ஐரோப்பாவில் 'ஹேக்' என்றதொரு ஒற்றுமையாலயத்திற்காக மும்மரமாய்த் திருப்பணி செய்துவந்தவர். இதுகாறும் பல தேசத்து மன்னர்கள் இவ்வாலயத்திற்குத் தங்களுடைய குறைகளைத் தீர்க்கச் சென்று, திரும்பவும் சமாதானத்துடனே இணங்கியும் வாழ்ந்திருக்கின்ருர்கள்.

1914-1918 இவ்வைந்து வருஷகாலமாய் நடந்த ஐரோப்பிய மகாயுத்தத்தில் கோடிக்கணக்கான ஜனங்களும், திரவியங்களும் மடிந்ததைக்கண்டு கண்ணீர்வடிக்காதவர்கள் யார்? ஒரே ஒரு சண்டையில் போர்வீரர்களால் செலவழிக்கப்பட்ட அஸ்திரங்கள் முழுமையும் தென்னுபிரிகாவில் போவர் யுத்தத்தில் செலவாகவில்லை. எப்பொழுதும் யுத்தமெனில், போர்வீரர்களின் சௌரியத்தாலும், சேனைத்தலைவர்களின் நுண்ணறிவாலும் அரசர்கள் ஒருவரையொருவர் வென்று வந்தார்கள். ஆயின் இக்காலத்தில் அவையெல்லாம் முற்றிலும் மாறிவிட்டன. அறிவும், ஆண்மையும், வரம்பற்றதொரு செல்வமதர்ப்பைப் போல, இந்நாட்களில் உதவிவருகின்றனவைகளல்ல. எந்நாட்டினருக்குப் பணக்கொழுப்பும் மிகுதியாகவே ஓங்கி நிற்கின்றதோ, அவர்களே சமீபத்தில் தமது சத்துருக்களை ஒடித்திருக்கிருர்கள். பிரிடிஷ் ஜனங்களுக்கு எல்லையற்றதோர் மூலபலம் கிடக்கின்றது. அதனுல் தான் ஜெர்மானியர்கள் தோல்வியடையும்படி நேர்ந்தது.

மேலும் இவ்வைரோப்பிய மகாயுத்தத்தில் எவ்வளவு பயங்கரமான அஸ்திரங்களும் சஸ்திரங்களும் பிரயோகிக்கப்பட்டன வென்பதை நமது நேயர்கள் அறிந்திருப்பார்கள். விஷக்காற்றும், வெகுதூரம் வரையில் பரவக்கூடிய நெருப்பு ஜ்வாலைகளும் லக்ஷலக்ஷமாய்ப் போர்வீரர்களை யமனுலகத்திற் கனுப்பிவிட்டன. இந்த யுத்தம் முடியுங்கால், ஜெர்மானியர்கள் எழுபத்தைந்து மைலுக்கப்பாலும் 'ஷெல்'களை யெறிந்து வெடிக்கச் செய்யும் பீரங்கிகளைக் கொண்டு பாரிஸ் நகரத்தைத் தாக்கிஞர்கள். இக்குரூரமான போர்முடிந்தபின்பும், 'ஸையன்ஸில்' ஆராய்ச்சிசெய்பவர்கள் இவைகளைப்பார்க்கிலும் இன்னும் ஆயிரமடங்கு படுகொலை செய்வதற்கான சூக்ஷ்மங்களைக் கண்டு பிடித்திருப்பதைக் கேட்டு நாம் நடுங்குகின்ருேம். 'பியர்ஸன் மாகஸைன்' என்றதோர் புஸ்தகத்தில் நாகரீகம்படைத்த பண்டித சிரோமணிகளால் நூதனமான அஸ்திரங்கள் என்ன சமீபத்தில் செய்யப்பட்டிருக்கின்றனவென்று ஒருவர் எழுதியிருக்கிருர். வரப்போகும் யுத்தங்களிலெல்லாம் 'ஸையன்ஸில்' சூரர்களாயிருப்பவர்களே அஸ்திரபலத்தைத் தமது நாட்டினருக்குத்தந்து அருளமுடியும். ஆகாயத்திலும், ஜலத்திலும் வலிமையுள்ளவர்கள்தான் கடைசியில் வெற்றி யடைவார்கள். மகத்தான யுத்த கப்பல்களால் இனிமேல் எவ்விதத்திலும் பிரயோஜனமில்லை. ஆகாயத்தில் எளிதில் சஞ்சரிக்கவும், மேலும் அதைத்தனது உள்ளங்கையிற்போல ஒருவனுல் வைத்தாட்டவும் முடியுமாகில், அவனே இவ்வுலகையும் ஆளுவான். பறவைகளைப்போலும், மீன்களைப்போலும் மனிதர்கள் தரையில் வசிக்காமல் பறக்கவும், ஜலத்திற்குள் மூழ்கிக்கிடக்கவும் ஒருபோதும் சாத்தியமாகமாட்டாது. ஆதலால்,— மற்றொரு யுத்தம் மறுபடியும் தொடங்குமாயின், இப்பூமியிலிருப்பவர்கள் எல்லோரும் ஒழிந்தே போகவேண்டும். பிரான்ஸில் ஓர் சிறுவன் நெருப்புமழை உண்டாக்குவதைக் கண்டுபிடித்திருக்கின்ருன். இதனுல் ஒரு ஸைனியம் முழுமையும் சில நிமிஷங்களுக்குள் நசித்துவிடும். நரி, பாம்பு, பெருச்சாளி, இவைகளைப்போல், பூமிக்குள் சுரங்கங்களில் வசித்தாலன்றி, உயிருடன் மனிதர்கள் பிழைத்திருப்பது எங்ஙனம்? இன்னமும், 125 மைலுக்கப்பால் 'ஷெல்'களை எறியக்கூடும் பீரங்கிகளும் இனிமேல் யுத்தங்களில் உபயோகப்பட்டு வரும். இம்மாதிரியாகச் சென்னையிலிருந்தபடியே, விஷக்காற்று வைத்தடைத்த 'ஷெல்'களைப் பிரயோகம் செய்வதால், விழுப்புரம்போன்ற பட்டணங்களை இரண்டல்லது மூன்று நாட்களுக்குள் மனிதப்பூண்டு இல்லாமல் அழித்துவிடலாம். தவிர 'எலெக்ட்ரிஸிடி' சக்தியால் வெடிமருந்துகளையெங்கேயும் ஒளித்து வைக்கவொட்டாமல் தடுக்க

முடியும். ஒரு 'ஷிரிஞ்' சைப்போலவே இன்னும் சற்று நீளமாயிருக்கும் ஓர் துப்பாக்கியிலிருந்து வெளிக்கிளம்பும் குண்டுகள் ஓரங்குல கனமுள்ள இரும்புத் தகட்டையும் துளைத்து விடுகின்றன. ஜலத்திலும், தரையிலும் ஒரேவிதமாய் எவ்விதத் தடங்கல்களு மன்னியில் கவலையற்றுச்செல்லும் (Ta nks என்னும்) யந்திரங்கள் ஊர்களையே காற்று விஷத்தால் நிர்மூலமாக்கி விடுமென்பதில் சந்தேகமில்லை. பதினையிரம் டன் 'ஸப்மரீன்'கள் முற்றிலும் 'எலெக்ட்ரிஸிடி' சக்தியால் செலுத்தப் படக்கூடும். அதாவது அவைகளுக்குள் ஒருவரேனும் உள்ளேயிருந்து அக்கப்பல்களைச் செலுத்தவேண்டியதில்லை. கம்பியில்லாத் தந்திகளடிக்கின்றவன் எவனும் கரையிலுட்கார்ந்தபடியே அம்மாதிரியான 'ஸப்மரீன்களை' தான் நினைத்த இடங்களுக்கெல்லாம் ஜலத்திற்குள் செலுத்துவான். இஃது எவ்வளவு பிரமாதமானதென்பது நாமாலோசித்துப்பார்க்குமளவில் நன்கு புலப்படும். மேலும் பறக்கும் யுத்தகப்பல்களும் செய்யப்பட்டிருக்கின்றன. நினைத்த மாத்திரத்தில் இவைகள் ஆகாயத்திலெழும்பிப் பறக்கவும், பிற்பாடு ஜலத்தில் மிகப் பெரிதான யுத்த கப்பல்களைப்போல் மிதக்கவும் முடியும். 'செஸபீக் குடாக்கடலில்' ஐயாயிரமடி உயிரத்திலிருந்தும் யுத்தகப்பல்களைக் குறிவைத்துப் போடப்பட்ட 'பாம்ப்'களில் ஒன்றாவது லக்ஷியம் தவறி விழவில்லை. 'ஆல்ஸ்டம்' என்னுமோர் யுத்தகப்பலில் 2000 பவுண்ட் நிறையுள்ள தொரு 'பாம்ப்' விழுந்ததால் அரை நிமிஷத்தில் அக்கப்பல் ஜலத்திற்குள் மூழ்கி வெகு ஆழமாய் ஊடுருவிச்சென்றது. ஒரு யுத்தகப்பலைச் சுற்றிலும் ஐம்பதடிக்குள் எங்கேயாவது 4000 பவுண்ட் கனமானதோர் 'பாம்ப்' ஜலத்திற்பட்டு வெடிக்குமாகின், அஃது உடனே பொடியாக்கப்பட்டுவிடும். வெகு சப்பத்திற்செய்யப்பட்டிருக்கும் விஷத்தில் இரண்டு சொட்டுகள் ஒருவனைக் கொல்வதற்குப் போதுமானவை. இதையே ஓராகாயக்கப்பலிலிருந்து தாம் நினைத்த விடத்தில் பகைவர்கள் வெள்ளமாகக் கொட்டுவார்கள். இங்கிலாண்டில் பிரிடிஷார் கண்டுபிடித்துள்ள 'எலெக்ட்ரிஸிடி' சக்தியால் ஒரு சேனை முழுவதும், தலையில் இடிவிழுந்து மடிவதுபோல், மடிவதற்கும் உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிகா ஐக்கிய தேசங்களில் பால்டிமோர் என்ற நகரத்தில் 10,000,000 பவுண்ட் விஷ திரவியங்களை யுத்தத்தி னுபதியாகப்பட்டுவரும் விஷக்காற்றுக்காகவே சேகரித்து வைத்திருக்கிறார்கள். இங்கிலண்டிலும் தினம் ஒன்றுக்கு 200 டன் நிறையுள்ள விஷக்காற்றை செய்வதற்கான யந்திரசாலைகள் உண்டு. பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் அப்படியே.

இஃதுதான் 'ஸையன்ஸின்' பெருமையாகும். நாகரிகம் விருத்தியாவதால், யுத்தத்தில் ஒருவரையொருவர் அழிப்பதெப்படியென்றெவ்வொரு நாளும் 'ஐரோப்பியர்கள்' ஆராய்ந்து வருகின்றனர். 'ஸையன்ஸ்' இவ்வளவு ஞானத்தைக் கொண்டு பிராணிகளைக் காப்பாற்றுவதற் கரிதாயிருக்கையில், அப்பிராணிகளை மாய்ப்பதிலேயே மனிதர்கள் இவ்வாறு கண்ணுங்கருத்துமாக இருப்பதும் ஏன்? என்னும் பிரரப்பனையே இதற்குக்காரணமல்லவா? பிரிடிஷாரைப்பார்த்து ஜெர்மனியர்கள் பொறாமைப்படுவதும், பிரெஞ்சுக்காரர்கள் தாங்களே ஐரோப்பாவில் பலமானவர்களாயிருக்க வேண்டுமென்பதும், இன்னும் இதுபோன்றவைகளே யுத்தத்திற்கு ஆதிகாரணமாக இருக்கின்றன. போர்புரிவதால் இக்காலத்தில் உலகமெங்கும் அச்சப்படத்தக்கதானதோர் அதிர்ச்சி உண்டாவதுடன், யுத்தம் செய்பவர்கள் மாத்திரம் அல்லாமல், இவ்வுலகிலிருப்பவர்களெல்லோரும் வறுமையிலும், துன்பத்திலும் கிடந்து மடிகின்றார்கள். 1914 முதல் 1918 வரையில் நடந்த ஐரோப்பிய மகாயுத்தத்தில் முற்றும் தோல்வியடைந்தவர்களைப் போலவே ஆங்கிலேயர்களும், அமெரிகர்களும், பிரெஞ்சுக்காரர்களும் கொஞ்சமேனும் சுகமடையவில்லை. இக்காலத்தில் யுத்தமெனில், இருபக்கத்தாருக்கும் ஒரே மாதிரியான கதிதான் நேரிடுகின்றது. ஜெர்மானியர்கள் அனுபவித்துவரும் கஷ்டதசையால், இங்கிலண்டிலும், பிரான்ஸிலும், அமெரிகாவிலும், ராஜ்யதந்திரிகள் மிக்கக்கவலைப்பட்டு வருகிறார்களே தவிர, நிரம்பவும் சௌக்கியத்துடனிருப்பதாய்த் தெரியவில்லை. ஜெர்மனியின் நாணயம் இவ்வாறு குறையும்பொழுது, அவர்களுக்கும் மனஅமைதி எங்கிருந்துவரும்? ஜெர்மானியர்களின் ஐசுவரியம் ஐம்பதில் ஒரு பாகமாக இக்ஷணத்தில் மலிந்திருக்கின்றது. என்றால், ஜெர்மனி வியாபாரம் பின்பு எப்படி நடக்கக்கூடும்? தங்கள் வியாபாரமும் நின்றுவிடின், ஜெர்மானியர்கள் வெற்றியடைந்தவர்களது நஷ்டஈட்டுக்காக அக்கோடிக்கணக்கான திரவியத்தை எங்கிருந்து தான் கொண்டுவருவார்கள்? முழுவதும் ஜெர்மனியின் நாசத்தால், மற்றவர்களுக்கும் பெருத்த மோசம் உண்டாகின்றதல்லவா? அதற்காகவே இனிமேலும் போரென்பது கூடாதென ஜினீவா நகரத்தில் ஓர் சபையை சிலர் ஸ்தாபித்திருக்கிறார்கள். மறுபடியும் யுத்தம் நேரிட்டால், இருகக்ஷிகளிலும், எவ்வாறு மிக்கக்குரூரமான அஸ்திரசஸ்திரங்கள் உபயோகிக்கப்பட்டு, பெரும்பான்மையோர் முற்றிலும் அழிந்து விடுவார்களென்பதை முன்னமேயே நாம் காண்பித்திருக்கின்றோம். பட்ட பிறகும் நாமொன்றும் கற்றுக்கொள்ளாவிடில், பிரயோஜனமென்ன?

மருளர் மடம்.

மருளர் மடத்தின் மாதாந்தக் கூட்டத்தில் அரிய பெரிய விஷயங்கள் வெளியாகின்றன வெனக் கேட்டு, அவைகளைத் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டு மடத்திற்குச் சென்றேன். அங்கு வாசலிலிருந்த காவலாள் கூட்டத்தாரல்லாத மற்றவர்கள் உள்ளே போகக் கூடாதென்று மறித்துவிட்டான். அவ் விஷயங்களிலுள்ள ஆசை மிகுதியால் வேறு வழியாய் ஒருவரும் காணாதபடி உள்ளே புகுந்து மறைந்து நின்றேன். அங்கு மேடையொன்றிருந்தது. அதனருகில் பத்து நாற்காலிகளில் கூட்டத்தார்கள் உட்கார்ந்திருந்தார்கள். மேடையின் மேலிருந்த நாற்காலி காலியாயிருந்தது. ஆனால் உடனே விபூதி ருத்ராக்ஷ மணிந்த ஓர் அந்தணர் உள்ளே யிருந்து வந்து மேடையின் மேல் நாற்காலியில் உட்கார்ந்தார். பிறகு எழுந்து கண்களை மூடிக் கொண்டு கைகூப்பிக் கடவுளைத் தொழுது, பின் வருமாறு பேசத் தொடங்கினார்:

"அருமைத் தோழர்காள், முந்திய நாள் கூட்டத்திற்குப் பிறகு நமது பரமாசாரியரிடமிருந்து எனக்குக் கிடைத்த விஷயத்தை உங்களுடன் கலந்து அநுபவிக்க வேண்டுமென்ற ஆவலுடையேன். அதாவது நீங்கள் எல்லோரும் கேட்டிருக்கலாம். சாதாரணமாய் அரிச்சுவடி தெரியாதவனுக்கு ஆயிரம் புஸ்தகமிருந்தும் பயனென்ன என்று சொல்வது வழக்கம். இதில் அரிச்சுவடி என்றால், எழுத்துக்கள் கற்பிக்கும் முதல் பாடப் புஸ்தக

மென்று ஸாமான்ய ஜனங்கள் எண்ணுகிறார்கள். அது அப்படி யல்ல. அரிச்சுவடி யென்றால், அரி, அதாவது விஷ்ணுவினது பாதச்சுவட்டில் விளங்கும் விஷயங்களாகும். அரியின் பாதச்சுவடு ஆகாயம், பூமி, மகாபலியின் தலை, இம் மூன்று இடங்களிலும் உள்ள வென்பது நமது புராண சித்தம். ஆகவே, இம் மூன்று இடங்களில் எழுதப்பட்டுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்வது அரிச்சுவடியைத் தெரிந்துகொள்ளலாகும். இவைகளை முறையே தெரிந்தவர்கள் சீஸப்பிரகரர், புசண்டி, குதுமர் என்னும் மூன்று ரிஷிகளாகும். இவர்களில் கடைசியிலுள்ளவர் மகாபலியைத் தொடர்ந்து பாதாளத்திற் சென்று அவர் தலையில் வரையப்பட்ட விஷயங்களை ஆராய்ந்து கொண்டிருக்கின்றார். மற்றைய இருவர்களும் பூமியிலும் ஆகாசத்திலும் வரையப்பட்ட விஷயங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இதன்றியும், நாமும் சிறிது முயற்சி யெடுத்துக்கொண்டால், இவ்விஷயங்களை உணரலாம். இதற்காக எனக்கு பரமாசாரியரால் உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்,'' என்று கீழே இறங்கி ஒவ்வொருவர் காதிலும் மந்திரத்தைச் சொல்லிவிட்டு திரும்பிவந்து நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டார். மற்றவர்களும் அவ்வாறே மூடிக்கொண்டார்கள். நானும் பிரயத்தன மன்னியில் கண்ணை மூடிக்கொண்டேன். உடனே என்னெதிரில் பின்வரும் எழுத்துகள் ஆகாசத்தில் காணப்பட்டன. 'பட்டப்பகற் பொழுதை யிருளென்ற மருளர்தம் பக்ஷமே யெமது பக்ஷம்.' இதைக் கண்டதும் எனக்கும் மயக்கம் வந்துவிடுமோவென்று பயந்து விரைவில் வெளியே சென்று அருகிலிருந்த ஆற்றிலிறங்கி முகத்தைக் கழுவிவிட்டு வாசற்காவலாளியிடம் சென்று கூட்டம் கலைவதற்கு எவ்வளவு நாழிகையாகுமெனக் கேட்டுக்கொண்டிருக்கையில், உடனே நாற்காலிகள் இழுபடும் ஓசை கேட்டது. உடனே உள்ளிருந்து அக்கிராஸனம் வகித்த அந்தணரை யொழிய மற்றையோரெல்லாம் சிரித்த முகத்தோடு வெளியே வந்தார்கள். அவர்களில் ஒருவர் 'இப்பொழுது எனக்கு ஒரு விமானம் ஒன்று தோன்றிற்று. அது உங்களுக்குத் தோன்றிற்றா' வெனக் கேட்டார். மற்றொருவர் 'அதின் சிகரத்தில் எழுதியிருந்ததை நீர் கவனிக்கவில்லையா' வென்றார். மற்றொருவர், 'அது கிடக்க, அவ்விமானத்தின் நடுவில் புஸ்தகத்தை வைத்துக் கொண்டிருந்த மங்கையரசியை நீங்கள் யாரும் பார்க்கவில்லையா' வென்றார். இன்னொருவர் 'அடாடா, அது பெண்ணுருவமாகத் தோன்றிற்றே யொழிய நிஜமாய்ப் பெண்ணல்ல. ஆடவர் திலகமாகும். தலையில் கூந்தலில்லாமல் மொட்டையாயிருந்ததை கவனிக்கவில்லையா' வென்றார். இவ்வாறு பேசிக்கொண்டே வெளிவந்து, அவரவர்கள் வண்டியேறிச்சென்றார்கள். நானும் மருள் நீங்கிக் கால் நடையாய் வீடு பெற்றேன்.

PRESS OPINIONS

THE TAMIL WORLD

WE have received from the Publisher, 16, Pasupati Agraharam, Mylapore, the first number of the "Tamil Ulagu" (Tamil World) a new Tamil weekly devoted to politics, literature and the arts. In politics it is an independent nationalist organ and gives its full support to the Bardoli programme. It is written in easy, elegant and popular Tamil and the first number contains very interesting articles on "The position of India in the last (Tamil) year". "The geological formation of the earth" and "The Empire of the mind" and a sympathetic review of the first two volumes of the late Mr. C. Subramanya Bharati's works which have just been published. The editorial "Ourselves" declares that the object of the promoters of the journal is to give adequate and permanent expression to the surging new life in the Tamil land. If further issues maintain the level of the first number, the journal deserves to succeed; and we wish it a prosperous career. The annual subscription is Rs. 5 and the half-yearly subscription Rs. 3.

'The Daily Express'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப் படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப் பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்சளைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இத்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணு எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

தமிழர் நேசன்.

சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.

இது தமிழர் கல்விச் சங்கத்தாரால் வெளியிடப்படுவது

பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.

அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.

கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.

வருஷச் சந்தா மூன்று ரூபாய்.

கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம், மைலாப்பூர்.

பண்டித. கே. ஏ. வெங்கடாசல சாஸ்திரிகளின்

மதனானந்த மோதகம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இன்பம் தரும் தாதுவிருத்தி லேஹியம். இது ஜனனேந்திரிய சம்பந்தமான எல்லாப்பிணிகளையும் போக்கி வலுவைக் கொடுக்கும். விலை டின் 1-க்கு ரூ. 5. (வி. பி. தனியே)

மானேஜர்: ஆயுர்வேத மந்திரம், மைலாப்பூர், சென்னை.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சந்தா வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.